**<u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.. 58/2022 தேதி- 01.12..2025

(P.W.2) . பிரியங்கா

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் D. Pharm படித்துள்ளேன். சி பட்டிகை சொத்து எங்களுக்கு உரிமைப்பட்டது. அதில் பிரதிவாதிகள் நடைபாதை உரிமைமட்டும்தான் கோருகிறார்கள் என்கிற விபரம் எனக்கு தெரியும். மேற்படி சொத்து பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்டது என்று அவர்கள் உரிமை கேட்கவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதியின் வீட்டில் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் வசித்து வருகிறார்கள். பிரதிவாதியும் அவர்களது குடும்பமும் சி பட்டிகை சொத்து வழியாக அவர்களது வீட்டிற்கு சென்று வருவதால் எங்களுக்கு என்ன நஷ்டம் என்றால் நடைபாதைக்கான இடம் இல்லை அதனால் கொடுக்கமுடியாது. சி பட்டிகை சொத்து வழியாகத்தான் பிரதிவாதிகளின் மின்இணைப்பு செல்கிறது என்றால் எனது வீட்டின் முன்பக்க சொத்து வழியாகத்தான் பிரதிவாதியின் வீட்டிற்கு மின்இணைப்பு செல்கிறது சி பட்டிகை சொத்து வழியாக செல்லவில்லை.

மின் இணைப்பு செல்வதற்காக நாங்கள் ஏதாவது ஆட்சேபணை மின்சார வாரியத்தில் ஆட்சேபணை தெரிவித்தோமா என்றால் எங்களது இடத்தின் வழியாக மின்இணைப்பு செல்லவில்லை அதனால் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. எனது அம்மா குறுக்கு விசாரணையின்போது பிரதிவாதியின் வசதிக்காக வேண்டி சி பட்டிகை சொத்து வழியாக மின்இணைப்பு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார் என்கிற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சி பட்டிகை சொத்து வழியாக மின்இணைப்பு செல்லவில்லை என பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு எ பட்டிகை சொத்தானது எனது அம்மாவின் சொத்து. பி பட்டிகை சொத்தானது எனது பெயரிலும் 3 ஆம் வாதி பெயரிலும் உள்ளது. 2012 ஆம் ஆண்டு பத்மநாபபுரம் வருவாய் கோட்டாட்சியர் இந்த பிரச்சனை சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டார் என்றால் விசாரணை மேற்கொண்டார். மேற்படி விசாரணைக்கு முன்பாகத்தான் பிரதிவாதியோ அவரது குடும்பத்தாரோ பி பட்டிகை சொத்து வழியாக செல்லக்கூடாது என தடுத்தோம் என்றால் எங்களுக்கு உரிமைப்பட்டது அதனால் தடுத்தோம். எனக்கும் 1 ஆம் வாதிக்கும் உரிமைமாற்றம் செய்து கொடுத்த நபர்கள் பிரதிவாதியும் மற்றும் அவரது குடும்பத்தார் சி பட்டிகை சொத்து வழியாக சென்றுவருவதை தடுக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2012 ஆம் ஆண்டுதான் எனக்கும் 3 ஆம் வாதிக்கும் கிரைய பத்திரம் மூலம் உரிமை கிடைத்தது என்றால் சரிதான். எங்களுக்கு உரிமைகிடைத்த பின்புதான் பிரதிவாதிகளும் அவர்களது குடும்பத்தாரும் சி பட்டிகை சொத்து வழியாக சென்றுவரக்கூடாது என தடுத்தோம் என்றால் சரிதான். பத்மநாபபுரம் கோட்டாட்சியர் எனது அம்மாவையும் எனது அப்பாவையும் வற்புறுத்தி வாக்குமூலம் வாங்கியிருப்பதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அதிகாரி இந்திய குடிமையியல் பணி செய்யும் அதிகாரி என்றால் சரிதான். மேற்படி உத்தரவிற்கு எதிராக மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான்.

எனது அப்பாவை வற்புறுத்தி வாக்குமூலம் வாங்கியதற்காக மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் மேற்படி விசயத்தை தெரிவித்தாரா என்றால் தெரிவிக்கவில்லை. மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு உறுதி செய்யப்பட்டு எனது அப்பா தாக்கல் செய்தமனு தள்ளுபடி செய்யப்பட்டது

என்றால் சரிதான். அந்த மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற ஆணையில் மனுவை தள்ளுபடி செய்து உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் கேட்டுக்கொள்ளும்படி தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த நீதிமன்றத்தில் எனது அப்பா சாட்சியம் அளிக்கவில்லை மேலும் இவ்வழக்கில் தரப்பினரும் அல்ல என்றால் சரிதான். பத்மநாபபுரம் கோட்டாட்சியர் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரியிடமும் வருவாய் ஆய்வாளரிடமும் மற்றும் உள்ளூர் மக்களிடம் விசாரணை மேற்கொண்டுதான் உத்தரவு பிறப்பித்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கோட்டாட்சியரின் உத்தரவு செல்லாது என கூறி இவ்வழக்கில் பரிகாரம் ஏதாவது கேட்டுள்ளோமா என்றால் கேட்டுள்ளோம். கோட்டாட்சியரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை.

கோட்டாட்சியரின் உத்தரவை ரத்து செய்யகோரி இவ்வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்ட வழிப்பாதை எந்த சர்வே எண்ணில் செல்கிறது என்றால் 73/2 ல் செல்கிறது. பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தார் சி பட்டிகை சொத்துவழியாக சென்றுவர வசதிஉரிமை கேட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கோ மற்ற வாதிகளுக்கோ பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தார் சி பட்டிகை சொத்தில் சென்றுவருவதை தடை செய்ய உரிமையில்லை என்றால் எங்களுக்கு உரிமை உள்ளது.

2012 ஆம் ஆண்டு சி பட்டிகை சொத்தில் போட்டுள்ள கேட்டை அகற்றவேண்டும் என்றால் எங்களுக்கு உரிமைப்பட்ட சொத்தில்தான் கேட் போட்டுள்ளோம் அதை அகற்றுவதற்கு அவசியமில்லை. பிரதிவாதியின் சொத்திற்கு மற்ற மூன்று பக்கமும் வேறு தனியார் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வீட்டில் பள்ளிக்கு செல்லக்கூடிய பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதியும் மற்றும் அவரது குடும்பத்தாரும் தற்போது அருகில்

இருப்பவர்களிடம் கேட்டுதான் அவர்களது இடத்தின் வழியாத்தான் சென்று வருகிறார்கள் என்றால் பஞ்சாயத்திற்கு உரிமைப்பட்ட இடம் இருக்கிறது அது வழியாகத்தான் பிரதிவாதி சென்று வருகிறார். பிரதிவாதி வேறு ஒருவரின் சொத்திற்கு சென்று அதிலிருந்துதான் பஞ்சாயத்து ரோட்டிற்கு செல்லமுடியும் என்றால் சரிதான். பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தார் 2 அடி சொத்தில்தான் வசதி உரிமை சமாதானமாக கேட்கிறார்கள் என்றால் சரிதான்.

எங்களுக்கு இவ்வழக்கில் பரிகாரம் வழங்கினால் பிரதிவாதிகளுக்கு ஈடுசெய்யமுடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அவரது எதிர்கோரிக்கை மனுதள்ளுபடி செய்யப்பட்டால் பிரதிவாதிக்கு ஈடுசெய்யமுடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றால் சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் எதிர்கோரிக்கை மனு அனுமதிக்கப்படவேண்டுமென்றால் சரியல்ல.